# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1954/2 - 2016 පෙබරවාරි මස 15 වැනි සඳුදා - 2016.02.15

*1954/2 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**கிழக்கு மாகாண மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தின்கீழ் வரைந்து பகிரங்கப்படுத்தப்படும் ஏற்பாடுகள், ஒழுங்குவிதிகள், கட்டளைகள், நியதிகள், ஏற்பாடுகள் மற்றும் விதிப்புக்களை திருத்தம் செய்தல்**

2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 1621/ 2 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கிழக்கு மாகாண மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கட்டளைகளில் 4 ஆம் அட்டவணை மற்றும் 2012 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆந் திகதிய 1757/2 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 4 ஆம் அட்டவணை முதலியன இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணை பிரதியீடு செய்யப்படுகின்றது.

இக்கட்டளைகள் 2016, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

இஸட். ஏ. நஸீர் அஹமட்,
கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும்
மாகாண நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும்,
உள்ளூராட்சி மற்றும் பிராந்திய நிர்வாகம்,
போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி,
சுற்றுலா மற்றும் சுற்றாடல், கட்டிடம் மற்றும்
நிர்மாணம், கிராமிய கைத்தொழில் மற்றும்
வீடமைப்பு அமைச்சர்.

நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி
மற்றும் பிராந்திய நிர்வாகம், போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி,
சுற்றுலா மற்றும் சுற்றாடல், கட்டிடம் மற்றும் நிர்மாணம், கிராமிய
கைத்தொழில் மற்றும் வீடமைப்பு அமைச்சு,
கிழக்கு மாகாண மாகாண சபை,
2016, பெப்புருவரி 15.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை 4

அதிகார சபையால் விதிக்கப்பட்ட கட்டணங்கள்

01. மேற்குறித்த அட்டவணையில் I ஆவது நிரலில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் விடயத்தில் ஏதேனுமொரு நோக்கத்துக்காகச் செலுத்தவேண்டிய கட்டணமானது, அட்டவணையில் II ஆவது நிரலில் காணப்படும் துணைக் குறிப்பில் சொல்லப்பட்ட கட்டணமாக அமைதல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | I ஆவது நிரல் விடயம் | II ஆவது நிரல் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா சதம் |
|---|---|---|
| 1 | அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பப்படிவத்துக்கான கட்டணம் | 350 0 |
| 2 | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான வருடாந்தக் கட்டணம் | 4,000 0 |
| 3 | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான வருடாந்தக் கட்டணம் - அதில் பயனடையும் மாகாணத்துக்கான தொடர் சேவைகள் | 4,000 0 |
| 4 | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை உரிய திகதியில் நீடிக்காது விட்டால் தாமதத்திற்கான நிலுவையாக 10% மேலதிக கட்டணம் அறவிடப்படும் | - |
| 5 | இடைக்கால வீதிக் குறிப்பு பெறுவதற்கு (ஒரு வருடத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு) | 2,000 0 |
| 6 | பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரப் புத்தகம் - துணைப் பிரதிகள் வழங்குதல் (காணாமல் போனதால்) | 5,000 0 |
| 7 | பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரப் புத்தகத்தில் பக்கங்கள் தீர்ந்து விட்டால்/பழுதடைந்து விட்டால் அதற்குப் பதிலாக துணைப் பிரதி வழங்குதல் | 750 0 |
| 8 | பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரத்தின் லேபல் துணைப் பிரதி வழங்குதல் | 300 0 |
| 9 | விசேட சுற்றுலா அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு நாளொன்றுக்கு | 500 0 |
| 10 | விசேட சுற்றுலா - ஒன்றுக்கு மேற்படும் நாளொன்றுக்கு | 100 0 |
| 11 | தற்காலிக அனுமதிப்பத்திரம் நாளொன்றுக்கு | 300 0 |
| 12 | பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரம் வழங்குதல் (பொது சேவைகள்) - "C" வீதிகள் | 50,000 0 |
| 13 | பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரம் வழங்குதல் (பொது சேவைகள்) - "B" வீதிகள் | 60,000 0 |
| 14 | பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரம் வழங்குதல் (பொது சேவைகள்) - "A" வீதிகள் | 75,000 0 |
| 15 | பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரம் வழங்குதல் (சொகுசு சேவைகள்) | 1,00,000 0 |
| 16 | அனுமதிப்பத்திரத்தை வேறொருவருக்கு பாரதீனப்படுத்தல் | 1,00,000 0 |
| 17 | அனுமதிப்பத்திரத்தின் உரிமையாளர் காலமானால் அவரது சட்டபூர்வ உரிமையைப் பெறும் நபருக்கு அனுமதிப்பத்திரத்தை மாற்றிக் கொடுத்தல் (மனைவி/கணவர் அல்லது பிள்ளைகளுக்கு) | 3,000 0 |
| 18 | அனுமதிப்பத்திரத்தின் உரிமையாளர் உயிருடன் இருக்கும்போது அவரது உடல் பலவீனமடைதல், ஊனமுறல் அல்லது பொருளாதார கஷ்டம் காரணமாக சட்டபூர்வ மனைவி/கணவர் அல்லது பிள்ளை களுக்கு பாரதீனப்படுத்தல் | 25,000 0 |
| 19 | அனுமதிப்பத்திரத்தின் உரிமையாளர் காலமானால் அவரது சட்டபூர்வ உரித்தாளி இல்லாத ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் (தொடர் இலக்கம் 16 இற்குரிய கட்டணம் ஏற்புடையதாகும்.) | - |
| 20 | பஸ் வண்டியின் நேர அட்டவணையில் துணைப்பிரதி வழங்குவதற்கு | 100 0 |
| 21 | ஓட்டுநர்களின் பொதுக் கோரிக்கையின் அடிப்படையில் நேர அட்டவணையைத் திருத்துவதற்கு (அதிகார சபை உடன்பாடு தெரிவிக்கும் சந்தர்ப்பங்களில்) | 250 0 |
| 22 | மேலதிக கட்டணக் குறிப்புகளை வெளியிடுவதற்கு | 50 0 |
| 23 | ஓட்டுநர்களின் பொதுக் கோரிக்கையின் அடிப்படையில் செயற்பாட்டு குறிப்புகளை திருத்தம் செய்தல் | 100 0 |
| 24 | பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரத்துக்குரிய ஒரு பஸ் வண்டியை மாற்றுதல் | 2,000 0 |
| 25 | பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரத்துக்கான சேவைகளில் திருத்தம் செய்தல் (ஓட்டுநர்களின் கோரிக்கையின் அடிப்படையில்) | 4,000 0 |
| 26 | பயணிகள் சேவைகள் லொக் பத்திரக் கட்டணம் - மாகாண தொடர் சேவைகள் (ஒரு மாதத்துக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு) | 750 0 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தொடர் இலக்கம்* | *I ஆவது நிரல்* *விடயம்* | *II ஆவது நிரல்* *செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா சதம்* |
|---|---|---|
| 27 | பயணிகள் சேவைகள் லொக் பத்திரக் கட்டணம்/நுழைவுக் கட்டணம்/ மாகாணங்களுக்கு இடையிலான தொடர் பொது சேவைகளுக்கு (ஒரு மாதத்துக்கு அல்லது அதில் ஒரு பகுதிக்கு) | 1,250 0 |
| 28 | பயணிகள் சேவைகள் லொக் பத்திரக் கட்டணம்/நுழைவுக் கட்டணம்/ மாகாணங்களுக்கு இடையிலான தொடர் அரை சொகுசு சேவைகளுக்கு (ஒரு மாதத்துக்கு அல்லது அதில் ஒரு பகுதிக்கு) | 1,500 0 |
| 29 | பயணிகள் சேவைகள் லொக் பத்திரக் கட்டணம்/நுழைவுக் கட்டணம்/ மாகாணங்களுக்கு இடையிலான தொடர் சொகுசு சேவைகள் 30 ஆசனங்களுக்கு குறைவானது (ஒரு மாதத்துக்கு அல்லது அதில் ஒரு பகுதிக்கு) | 1,500 0 |
| 30 | பயணிகள் சேவைகள் லொக் பத்திரக் கட்டணம்/நுழைவுக் கட்டணம்/ மாகாணங்களுக்கு இடையிலான தொடர் சொகுசு சேவைகள் 30 ஆசனங்களுக்கு மேற்பட்டது (ஒரு மாதத்துக்கு அல்லது அதில் ஒரு பகுதிக்கு) | 2,000 0 |
| 31 | பயணிகள் சேவைகள் லொக் பத்திரக் கட்டணம்/நுழைவுக் கட்டணம்/ மாகாணங்களுக்கு இடையிலான அதிகூடிய சொகுசு சேவைகள் (ஒரு மாதத்துக்கு அல்லது அதில் ஒரு பகுதிக்கு) | 2,500 0 |
| 32 | பயணிகள் சேவைகள் லொக் பத்திரக் கட்டணம்/நுழைவுக் கட்டணம்/ செலுத்துவதற்கு தாமதமடைவதால் திரட்டிய நிலுவைகளுடன் மேலதிக கட்டணமாக 10% அறவிடல் | - |
| 33 | நேர அட்டவணை அல்லது வேறு கணினி அச்சுப் பிரதியொன்றை (தாளில் ஒரு பக்கம்) பெறுவதற்கு | 50 0 |
| 34 | ஒரு மாதத்தில் 6 நாட்களுக்கு ஒரு பஸ் வண்டியை பரிசோதனை செய்வதற்கும், பஸ் வண்டியின் உரிமையாளருக்கு பரிசோதனை அறிக்கையை பெற்றுக்கொடுப்பதற்கும் அறவிடும் கட்டணம் (ஓட்டுநரின் உடன்பாட்டுடன்) | 3,000 0 |

03 - 09

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.